TAMIL NADU LEGISLATURE
23 APR 1973
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 பிப்ரவரி 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

Drainage Scheme for Tiruvotriyur

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

* 21 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have any proposal to implement a drainage scheme for Tiruvottiyur shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இத்திட்டம் அமைப்பதற்கு ரூ. 85.34 லட்சமும், பேணி வருவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2.26 லட்சமும் செலவாகக் கூடியதுமான திருவொற்றியூர் நகராட்சிக்கான வடிகால் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தும்.

Theft cases

* 22 Q.—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the increasing number of women thieves in Madras City in recent times; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) பெண் குற்றவாளிகள் வழக்கமாகப் புழங்குகிற திருமண வீடுகள் முதலிய இடங்களைக் கண்காணிக்குமாறு காவல்துறைப் பணியாளர்களுக்குக் காவல்துறைக் கமிஷனரால் சிறப்புக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

[1973 பிப்ரவரி 6

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே, பெண்கள் பயந்த சுபாவம் உள்ளவர்கள். ஆனால், சில சினிமாப் படங்களில் கள்ளக்கூட்டத் தலைவிகளாகவும், கொள்ளைக்கூட்டத் தலைவிகளாகவும் நடிக்கக்கூடிய பாத்திரங்களைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதைத் தடுக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அந்தப் பாத்திரங்களில் நடிக்கின்ற பெண்கள் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : முதல் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, பெண் குற்றவாளிகள் சென்னையில் அதிகமாக இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அவர்கள் திருட்டு வேலையில் ஈடுபடும்போது எம்மாதிரியான பொருட்களை அதிகமாகத் திருடு கிறார்கள் ? அப்படித் திருடுவதைத் தடுக்க இந்த அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் பொதுவாகவே திறந்து கிடக்கும் வீடுகளிலும், குறிப்பாகத் திருமண வீடுகளிலும் திருமணத்திற்கு வந்திருக்கிற பெண்களோடு கலந்து, அங்கே இருக் கின்ற நகைகளைத் திருடுவதுதான் பொதுவான திருட்டாக இருந்து வருகிறது. அவற்றைக் கண்டுபிடிக்கும் வகையில் குற்றவாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று கணக்கிடும்போது அந்தக் குற்றங் களில் ஈடுபட்டவர்கள் அதிகமாகப் பிடிபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும், இந்தப் பெண் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் கமிஷனர் ஆணைகளைப் பிறப்பித்திருக்கிறார்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட பெண் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பெண் போலீஸ் அமைப்பது குறித்து நம்முடைய அரசாங்கத்திலே ஒரு தீர்மானம் இருந்ததா ? அந்தத் தீர்மானம் இருந்தால் அதை நிறைவேற்ற அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பெண் போலீசைப்பற்றி ஒரு யோசனை இந்த அரசுக்கு இருந்து வருகிறது. அது விரைவிலே முடிவு செய்யப்படாவிட்டாலும் காலப்போக்கில் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1973 பிப்ரவரி 6]

திரு. கே. என். குமாரசாமி : உதவித் தலைவர் அவர்களே, பெண்களை வைத்துக் கள்ளக்கடத்தல் செய்யும் நிலைமை உருவாக்கப் பட்டுள்ளதே, அதை விரைவில் கண்டுபிடிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடத்தல் காரியங்களில் ஈடுபடும்போது அந்தப் பெண்கள் கைது செய்யப்படுகிறார்கள். முதலிலேயே சந்தேகப்பட்டு இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவது அவ்வளவு பொருத்தமாக இல்லாத காரணத்தால்தான் அவர்கள் அந்தக் காரியங்களுக்கு ஈடுபடுத்தப்படும்போது போலீசாரால் கைது செய்யப்படுகிறார்கள்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை

* 23 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள் ஆட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் தமிழ் ஆராய்ச்சித் துறையில், தமிழ் ஆராய்ச்சி வல்லுநர்களும் கல்வெட்டு ஆராய்ச்சி வல்லுநர்களும் இடம் பெற்றுள்ளனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொல்பொருள் ஆராய்ச்சித் தமிழ் ஆராய்ச்சி வல்லுநர் என்ற தனித்ததொரு பதவி கிடையாது. கல்வெட்டு ஆய்வாளர் என்றும், அகழ்வாய்வாளர் என்றும் பதவிகள் உள்ளன. இவற்றில் பதவி வகிப்பவர்கள் தமிழில் திறன் பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது விதி.

Recruitment of teachers for elementary schools

* 24 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the number of teachers to be recruited for the elementary schcools in the State during 1972?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுமார் 3,470 பேர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிபெற்று 30 வயதை எட்டியிருக்கின்ற பல ஆசிரியர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் ஒருசில ஆசிரியர்கள் உண்ணு நோன்பு மேற்கொண் டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?